

திருவாரூரில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் சோமாஸ்கந்தன் எழுதிய 'வழிகாட்டும் திராவிடம்' என்ற நூலினை வெளியிட கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர்கள் பூண்டி எஸ்.கலைவாணன், நாகை எஸ்.கௌதமன், எஸ்.டி.பி.ஐ. கட்சி மாநிலத் தலைவர் முபாரக், 'தாட்கோ' தலைவர் இளையராஜா ஆகியோர் உள்ளனர்.

### வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு சட்டமுன்வரைவு!

## மத சிறுபான்மைத் தொண்டு நிறுவனங்கள் மீது நேரடித் தாக்குதல்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஏப். 3 -**

**"வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு சட்ட முன்வரைவு மசோதா சிறுபான்மைத் தொண்டு நிறுவனங்களையும் குறி வைத்துத் தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல் ஆகும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டமுன்வரைவு, 2026 என்ற பெயரில் ஒன்றிய பா.ஜ.க. அரசால் முன்மொழியப்பட்டிருக்கும் திருத்தங்கள் முழுக்க முழுக்க கிறித்தவத் தொண்டு நிறுவனங்களையும், தேவாலயங்களையும், பிற மதச் சிறுபான்மைத் தொண்டு நிறுவனங்களையும், குறிவைத்துத் தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல் ஆகும்.

ஏற்கெனவே வக்பு வாரிய சட்டத் திருத்தம் மூலம் இஸ்லாமிய சொத்துகளைக் கபளீகரம் செய்ய முயன்றதையடுத்து, தற்போது மற்ற மதச்சிறுபான்மையின அமைப்புகள் வெளிநாடுகளில் இருந்து பெறும் நிதியை முடக்கும் முயற்சியில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இறங்கியுள்ளது.

எதிர்க்கட்சிகளின் போராட்டத்தாலும், கிறித்தவர்கள் அதிக அளவில் வாழும் கேரளத்தில் தேர்தல் நடைபெற இருப்பதாலும் இப்போதைக்குப் பின்வாங்குவது போல நடித்து, விரைவில் நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத்தொடரைக் கூட்டி இந்த சட்டத்திருத்தத்தை நிறைவேற்ற பா.ஜ.க. அரசு திட்டமிடுவதாக அறிகிறேன்.

இந்த முயற்சிகளைக் கைவிட்டு, பிரதமர் அவர்கள் இந்தத் தன்னிச்சையான, அநியாயச் சட்டத்திருத்தத்தை முற்றிலுமாகத் திரும்பப் பெறும் நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

### சட்டப்பேரவைத் தேர்தல் – 2026 – இன்று

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - காணொலி மூலம் அனைத்துத் தொகுதிகளிலும் உள்ள கழக நிர்வாகிகளோடு கலந்துரையாடல்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,** அனைத்துத் தொகுதிகளிலும் உள்ள கழக நிர்வாகிகளுடன் இன்று (03.04.2026 – வெள்ளிக்கிழமை) நண்பகல் 12.00 மணிக்கு காணொலி மூலம் கலந்துரையாடுகிறார்.

அதுபோது, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியளவிலும் ஓரிடத்தில் தக்க ஏற்பாடுகளைச் செய்யும்படி மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள், கழக வேட்பாளர்கள், பகுதி – நகரம் – ஒன்றியம் வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதிக்கான கேட்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

காணொலி இணைப்பு, தலைமைக்கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி:

## 116வது வட்டத்தில் இன்று காலையில் நடந்து சென்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரிக்கிறார்!

சென்னை, ஏப்.3-

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. திருவல்லிக்கேணி பகுதி 116வது வட்டத்தில் கழக வெற்றி வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று காலையில் நடந்து சென்று வாக்கு சேகரிக்கிறார்.



இன்று (03.04.2026 வெள்ளிக்கிழமை) காலை 7.00 மணி முதல் பிரச்சாரத்தை துவக்குகிறார்.

நடந்து சென்று வாக்கு சேகரிக்கும் இடங்கள்:

மாட்டாங்குப்பம் துவங்கி தொடர்ந்து வி.ஆர். பிள்ளை தெரு, கற்பக கன்னியம்மன் கோவில் தெரு 1 முதல் 6 தெருக்கள், பழனி அம்மன் கோவில் தெரு 1 முதல் 6 தெருக்கள், பழைய கட்டை தொட்டி தெரு, புதிய கட்டை தொட்டி தெரு, சுங்குவார் தெரு ( முடியும் இடம்) ஆகிய இடங்களில் கழக வெற்றி வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாக்கு சேகரிக்கிறார் என்று 116வது வட்டச் செயலாளர் எஸ்.சசிகுமார் தெரிவித்துள்ளார்.




## தி.மு.க.வின் தேர்தல் பிரச்சாரப் பாடல் வீடியோ வெளியீடு!

சென்னை, ஏப். 3 -

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பிரச்சாரப் பாடலின் வீடியோ வெர்ஷனை தி.மு.க. எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

வரும் சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்கி தமிழ்நாடே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. கூட்டணிக் கட்சிகளுக்கு தொகுதிப் பங்கீடு, வேட்பாளர் அறிவிப்பு, வேட்புமனுத்தாக்கல், பிரச்சாரம் என தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட பெரிய கட்சிகள் மும்முரமாக வேலை செய்து வருகின்றன.

வாக்குப்பதிவுக்கு இன்னும் 22 நாட்கள் உள்ள நிலையில், "ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்" என்ற பிரச்சாரப் பாடல் வெளியாகியுள்ளது. தற்போது அதன் வீடியோ வெர்ஷனை தி.மு.க. வெளியிட்டுள்ளது.



இதுதொடர்பான தி.மு.க.வின் எக்ஸ் தளப்பக்கத்தில், "சமூகநீதி, சமத்துவம், மாநில உரிமை என தி.மு.கழகத்தின் அனைத்துக் கொள்கைகளையும் முன்னிறுத்தி தமிழ்நாட்டைப் பாதுகாத்து வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சி தொடரட்டும்! தமிழ்நாடு மேலும் வளர்ச்சியடையட்டும்! திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கும், மதச்சாற்பற்ற முற்போக்குக் கூட்டணிச் சின்னங்களுக்கும் வாக்களிப்பீர்!" என்று பதிவிடப்பட்டுள்ளது.

கழகத் தொண்டர்களை மிகவும் கவர்ந்துள்ள இந்தப் பாடல் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

### சைதாப்பேட்டை 168வது வட்டத்தில்

## கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பு!

### பொதுமக்கள் உற்சாக வரவேற்பு!

சென்னை, ஏப். 3-

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி - சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர்மா.சுப்பிரமணியன் நேற்று (2-4-2026) வியாழக்கிழமை சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் உள்ள 168வது அ வட்டத்தில் காலை 6.45 மணிக்கு ஆலந்தூர் சாலை ஐந்து விளக்கு அருகே நடக்கத் தொடங்கி அதனருகில் உள்ள நெருப்பு மேடு பகுதியில் அனைத்துத் தெருக்களிலும் நடந்து சென்று வாக்காளர்களைச் சந்தித்து இந்த வார்டில் செய்த சாதனைகளை எடுத்துக்கூறியும், தமிழ்நாட்டின் தேர்தல் கதாநாயகன் - தி.மு. கழக தேர்தல் அறிக்கையில் உள்ள முக்கியமான திட்டங்களை எடுத்துக்கூறியும் தீவிரமாக வாக்குச் சேகரித்தார்.

தொடர்ந்து காலை 8 மணிக்கு ஜோகிதோட்டம், ஜோதியம்மாள் நகர், செட்டித்தோட்டத்திலும், காலை 9 மணியளவில் வி.ஜி.பி. சாலை, கஸ்டம்ஸ் காலனி, சென்ட்ரல் எக்சைஸ் காலனியிலும், காலை 10 மணியளவில் பார்சன் காம்ப்ளக்ஸ் விநாயகபுரத்தில் நண்பகல் 12.30 மணிவரையிலும் கோடை வெப்பத்தில், அனல் பறக்கும் தீவிர வாக்குச் சேகரிப்புப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். மதியம் உணவு இடைவேளைக்குப் பிறகு மாலை 4 மணிக்கு மீண்டும் அருளாயம்மன் பேட்டையில் தொடங்கி நடக்கத் தொடங்கி, நாகிரெட்டித்தோட்டத்திலும், லேபர் காலனியில் உள்ள அனைத்துத் தெருக்களிலும், லேபர் காலனி மேல்குடியிருப்பு மற்றும் அன்னை சத்யா நகர், வண்டிப்பாதை தெருக்களிலும், இறுதியாக ரெட்டித் தெருவில் இரவு 9 மணி வரையிலும் நடந்தே சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கிக் கூறியும், இந்த வார்டிலும் செய்யப்பட்ட சாதனைகளையும் விளக்கியும் காலை தொடங்கி12.30 மணிவரையில் 6 மணிநேரமும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை 6 மணி நேரமும், நடந்தேச் சென்று பொதுமக்களை 12 மணிநேரம் தீவிர வாக்குச் சேகரிப்பில் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

செல்லும் அனைத்து இடங்களிலும் பொதுமக்கள் கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியனுக்கு சிறப்பான வரவேற்பு அளித்திடும் வகையில் ஆரத்தி எடுத்தும், பூக்களை வழங்கியும் தமது மகிழ்ச்சியையும், இந்த வார்டுக்கு செய்த திட்டங்களையும் கூறி நன்றித் தெரிவித்து, மிகப் பெரிய வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறுவதற்கு உறுதியளித்தனர்.

இந்த வாக்குச்சேகரிப்பு நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், வட்ட கழக செயலாளர் தா. மோகன்குமார், சைதைத் தொகுதி பொறுப்பாளர் சைதை சாதிக், காங்கிரஸ் ஜோதிபொன்னம்பலம், வி.சி.க ம.ஜேக்கப், ம. தி.மு.க. ப.சுப்பிரமணி, தே.மு.தி.க - ஆனந்தன், எஸ்.டி.பி.ஐ. - அபுதாகிர், ம.ம.க-சாகுல்அமீது, கதிர், அம்பேத்கர்தாசன் உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் பங்கேற்றனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கார்த்திக் மோகன் அவர்களை ஆதரித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு சிட்கோ நகர் பகுதியில் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வின் போது மேயர் பிரியா ராஜன், பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பீ. ஜெயின், வே.வாசு, வானவில் விஜய் டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன்,சுதா தீனதயாளன் தாஹா எல் நவீன்,ஜி.ஜெ.பிரபு,சிட்கோ சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ)உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு, கே.எஸ்.பாபு. மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று காலை 6.45 மணிக்கே ஐந்துவிளக்கு பகுதியில் இருந்து 168அ வட்டம் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பொதுமக்கள் வேட்பாளருக்கு உற்சாக வரவேற்பளித்து, ஆரத்தி எடுத்து தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். இந்த வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், வட்ட கழக செயலாளர் தா.மோகன்குமார். சைதைத் தொகுதி பொறுப்பாளர் சைதை சாதிக், காங்கிரஸ் ஜோதிபொன்னம்பலம், வி.சி.க ம.ஜேக்கப், ம.தி.மு.க. ப.சுப்பிரமணி, தே.மு.தி.க ஆனந்தன், எஸ்.டி.பி.ஐ. அபுதாகிர். ம.ம.கசாகுல்அமீது, கதிர், அம்பேத்கர்தாசன் உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் பங்கேற்றனர்.